## இயல் 7.7 - சதவீதமும் தனிவட்டியும்

பயிற்சி எண் :: 7.7.2.2.B

சதவீதமும் தனிவட்டியும் - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - தநாஅபு - பயிற்சி 2.2 5-11

Percentage & Simple Interest - Day to day life problems

## சதவீதமும் தனிவட்டியும் - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - தநாஅபு - பயிற்சி 2.2 5-11

5. ஒரு மட்டைப்பந்து ஆட்டக்காரர் 86% ஓட்டங்களைச் சேகரித்தார். அதைத் தசமமாக எழுதுக.

மட்டைப்பந்து ஆட்டக்காரர் சேகரித்த ஓட்டங்களின் சதவீதம் = 86%

சதவீதம் என்பது 100 - ஐப் பகுதியாகக் கொண்ட அமைப்பு ஆகும்.

∴ அந்த மட்டைப்பந்து ஆட்டக்காரர் சேகரித்த ஓட்டங்களின் சதவீதத்தின் தசம எண் $= \frac{86}{100} = 0.86$

∴ மட்டைப்பந்து ஆட்டக்காரர் சேகரித்த ஓட்டங்களின் சதவீதத்தின் தசம எண் **0.86** ஆகும்.

6. ஒரு பள்ளியின் கொடிக் கம்பத்தின் உயரம் 6.75 மீ எனில், அதைச் சதவீதமாக மாற்றுக.

பள்ளியின் கொடிக் கம்பத்தின் உயரம் = 6.75 மீ

தசம எண்ணை சதவீதமாக மாற்ற 100% - ஆல் பெருக்க வேண்டும்.

∴ அப்பள்ளியின் கொடிக் கம்பத்தின் உயரத்தின் சதவீதம் $= 6.75 \times 100\% = 675\%$

∴ பள்ளியின் கொடிக்கம்பத்தின் உயரத்தின் சதவீதம் **675%** ஆகும்.

7. இரண்டு இரசாயனப் பொருட்களின் எடைகள் 20.34 கிராம் மற்றும் 18.78 கிராம் எனில், அவைகளின் எடையின் வித்தியாசத்தைச் சதவீதத்தில் கூறுக.

இரசாயணப் பொருட்களின் எடைகளின் வித்தியாசம் = 20.34 - 18.78 = 1.56 கிராம்

| |
|---|
| 20.34 |
| (-)18.78 |
| 1.56 |


தசம எண்ணை சதவீதமாக மாற்ற 100% - ஆல் பெருக்க வேண்டும்.

இரசாயனப் பொருட்களின் எடைகளின் வித்தியாசத்தின் சதவீதம் $= 1.56 \times 100\% = 156\%$

∴ இரசாயனப் பொருட்களின் எடைகளின் வித்தியாசத்தின் சதவீதம் **156%** ஆகும்.


8. கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தில், நிழலிடப்பட்ட பகுதியின் சதவீதத்தைக் காண்க.

கொடுக்கப்பட்டுள்ள படம் ஒரு பெரிய சமபக்க முக்கோணம். சம அளவுள்ள 4 சிறிய சமபக்க முக்கோணங்களை உள்ளடக்கியது போல் உள்ளது. மேலும், அதில் ஒரு சிறிய சமபக்க முக்கோணம் மட்டுமே நிழலிடப்பட்டுள்ளது.




கொடுக்கப்பட்டுள்ள படத்தில் நிழலிடப்பட்டுள்ளப் பகுதியின் பின்னம் $= \frac{1}{4}$

∴ கொடுக்கப்பட்டுள்ள படத்தில் நிழலிடப்பட்டுள்ள பகுதியின் சதவீதம் $= \frac{1}{4} \times 100\% = \frac{1}{4} \times 100\%$ $= 25\%$




∴ கொடுக்கப்பட்டுள்ள படத்தில் நிழலிடப்பட்டுள்ள பகுதியின் சதவீதம் **25%** ஆகும்.

9. 142.5% ஐச் தசமமாக மாற்றினால்

(a) 1.425 ✓ (b) 0.1425 (c) 142.5 (d) 14.25

$142.5\% = \frac{142.5}{100} = 1.425$

10. 0.005 ஐச் சதவீதமாக மாற்றினால்

(a) 0.005% (b) 5% (c) 0.5% ✓ (d) 0.05%

$0.005 = 0.005 \times 100\% = 0.5\%$

11. 4.7 இன் சதவீத வடிவம்

(a) 0.47% (b) 4.7% (c) 47% (d) 470% ✓

$4.7 = 4.7 \times 100\% = 470\%$


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Wednesday 21st September, 2022 :: 14:15 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.